**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் ஆனித் திங்கள் 19–ம் நாள்

2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 03–ம் நாள் வெள்ளிக்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 13/2025**

**CNR.No. TNMY07-000012-2025**

சீர்காழி டி.மு.லாகா, சீர்காழி தாலுக்கா, வாணகிரி கிராமம், மேல வாணகிரி முகவரியில் வசிக்கும் கணபதி குமாரர் 63 வயதுள்ள குணசேகரன்.

**...வாதி**

**...எதிர்...**

1. சீர்காழி டி.மு.லாகா சீர்காழி தாலுக்கா, வாணகிரி கிராமம், மீனவர் காலணி முகவரியில் வசிக்கும் மாணிக்கவேலு குமாரர் 45 வயதுள்ள கலையரசன்.

2. சீர்காழி டி.மு.லாகா, சீர்காழி தாலுக்கா, வாணகிரி கிராமம், மீனவர் காலணி முகவரியில் வசிக்கும் மாணிக்கவாமி குமாரர் 65 வயதுள்ள ரவி.

**...பிரதிவாதிகள்**

தாவா சொத்துக்களை வாதி அனுபவிப்பதற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அவர்களது ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும், இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 27.01.2025 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 27.01.2025 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 21.01.2025ம் தேதியில் சீர்காழி தாலுக்கா வாணகிரி வருவாய் கிராமத்தில் வழக்கு மூலம் எழுந்துள்ளது. |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | தாவா சொத்துக்களை வாதி அனுபவிப்பதற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அவர்களது ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் |

| | |
|---|---|
| | செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற வாதியின் பொறுமானம் ரூ.1,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு, அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.30/- நீ.ம.க.ச பிரிவு 27(c) படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 24.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததாலும், கடந்த 12.11.2025 அன்று 1,2 பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், தோன்றா தரப்பினராக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

## <u>தீர்ப்பாணை</u>

1. இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகிறது.
2. தாவா சொத்துக்களை வாதி அனுபவிப்பதற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அவர்களது ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கியும், செலவுத்தொகையின்றி தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

## <u>சொத்து விபரம்</u>

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், சீர்காழி (தற்பொழுது செம்பனார்கோவில்) சார்பதிவகம், மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, வாணகிரி கிராமம், கீழத்தெரு

<u>சர்வே எண்கள்:</u>

ச.மீ

1. 191/2B1 ர.மனை 621 (கீழ்பாகம்) (புகல்) (திட்ட விஸ்தீர்ணம் 821 ச.மீ) இதில் உள்ள ஓட்டு வீடு உள்பட.

<u>**நான்கெல்லை விபரம்:**</u>

வடக்கில் – ரோடு,

கிழக்கில் – ஜெயராமன் வீடு மனை,

மேற்கில் – அமரஜோதி வகையறா பாக மனை, தற்பொழுது சாந்தா வீடு,

தெற்கில் – A ஷெட்யூல் பாக மனை அதாவது தாவா 2வது அயிட்டம் இதற்குட்பட்டது.

2. 191/2 B2 புஞ்சை 2020 (பூரா) சதுர மீட்டரில் 1592.42 சதுர மீட்டர் இடம்.

<u>**நான்கெல்லை விபரம்:**</u>

வடக்கில் – A,B ஷெட்யூல் பாக மனை தற்பொழுது தாவா 1வது அயிட்டம்

கிழக்கில் – ஜெயராமன் புஞ்சை

மேற்கில் – பிரிதிவிராஜன் மனை

தெற்கில் – உத்திராபதி புஞ்சை இதற்குட்பட்டது.

**வாதி, பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 03ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/– மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>தீர்ப்பாணை</u>**

அசல் வழக்கு எண்.13/2025

நாள்.03.07.2026.